அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். மீகா 7:11

# கிருபையின் மன்னா!

மன்னா - 2 | ஜனவரி - 2018 | மலர்-13

# சபைக்குத் தேவன் தரும் மன்னா

புத்தாண்டில் பிரவேசித்திருக்கும் தேவமக்களுக்குத் தேவன் கொடுக்கவிரும்பும் ஆசீர்வாதங்களோடு சில கட்டளைகளையும் கொடுக்கிறார். அவற்றை எரேமியா 7:1 முதல் 7 வரையிலுள்ள வேதபகுதியிலிருந்து நாம் தியானிப்போம்.

எரேமியா 7:1-7

இந்த வேதபகுதி, நாம் எவ்வாறு சமாதானத்தையும் பாதுகாப்பையும் பெற்று, கர்த்தர் நமக்குக் கொடுக்கும் ஸ்தலத்தில் குடியிருக்க முடியும் என்று கூறுகிறது. இதற்குத் தேவன் சில கட்டளைகளை நமக்குக் கொடுக்கிறார். அவற்றை நாம் கடைப்பிடிக்கும்போது, நாம் வாழுமிடத்தில் சமாதானமும் பாதுகாப்பும் பெற்றுக்கொள்வோம்.

**1. முதலாவதாக, நம் வழிகளையும் கிரியைகளையும் சீர்ப்படுத்துதல் - Amending our ways and doings**

எரேமியா 7:3இல் கூறப்பட்டுள்ள அதே சொற்களை, எரேமியா 18:11இலும், எரேமியா 26:13இலும் நாம் காணலாம். எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர், திரும்பத் திரும்பக் கூறும்போது, நாம் அதைச் செய்யவேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ளலாம். நம் கிரியைகளும் வழிகளும் பொல்லாதவையாயிருப்பின், அவற்றைச் சீர்ப்படுத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஆனாலும், நம் வாழ்க்கை முறையை முற்றிலும் மாற்றியமைப்பது மிகவும் அவசியமாயுள்ளது. நாம் நம் கிரியைகளையும் வழிகளையும் சீர்ப்படுத்துவோமானால், கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுப்போம். பேதுரு அப்போஸ்தலன், மாயவித்தைக்காரனாயிருந்து, பிலிப்புவின் பிரசங்கத்தின் மூலம் இரட்சிக்கப்பட்ட சீமோனிடம் இவ்வாறு கூறுகிறார்:"... நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி

வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்" (அப். 8:22). பேதுரு ஏன் இவ்வாறு கூறினார்? அப்போஸ்தலர் தங்கள் கைகளை யார் மேல் வைத்தார்களோ, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதைக் கண்ட அவன், தானும் அந்த அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக, பணத்தைக் கொண்டு வந்ததினால் பேதுரு அவனைப்பார்த்து, "தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியினால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது..." என்று தேவ வார்த்தைகளைக் கூறினபோது, சீமோன் உணர்வடைந்தான்.

நாமும் நம் எண்ணங்கள், கிரியைகள், வழிகள் யாவற்றையும் சீர்ப்படுத்த எண்ணுவோமானால் கர்த்தர் நம்மோடே பேசி, இடைபடுவார். அப்பொழுது நாம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுவோம்.

**2. வழக்கை நியாயமாய்த் தீர்ப்பது (வச. 5) - Truly executing justice between every man and his neighbour.**

இதையும் கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். நாம் மனிதருக்கிடையிலுள்ள வழக்கை நியாயமாய்த் தீர்க்க வேண்டுமானால், நாம் தேவனுக்குப் பயந்து, உண்மையும் நீதியுமுள்ளவர்களாக நியாயந்தீர்க்கவேண்டும். தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. அவ்வாறே நாமும் வழக்கை நீதியாக நியாயந்தீர்க்கவேண்டுமென்று தேவன் கட்டளையாகக் கூறுகிறார். தேவனுக்குப் பயப்படும் பயம் நம் உள்ளத்திலிருக்குமானால், நாமும் அவரைப்போலவே நீதியாக நியாயந்தீர்க்கமுடியும். தெய்வபயம் இல்லாத காரணத்தால், பரிதானம் வாங்கிக்கொண்டு நியாயத்தைப் புரட்டுகிறவர்களாய் நியாயாசனத்தில் அமர்ந்து, நீதிசெய்கிறவர்களைப் போன்று செயல்படுகிறவர்களையும் நாம் இந்நாட்களில் காணமுடிகிறது.

சாமுவேல் தீர்க்கதரிசி கர்த்தருக்குப் பயந்து உண்மையும் நேர்மையுமுள்ளவராய் இஸ்ரவேல் மக்களை நியாயம் விசாரித்தார் என்று நாம் வேதபுத்தகத்தில் வாசிக்கிறோம். ஆனால், அவருடைய இரு குமாரரோ அவ்வாறில்லாது, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினதாகவும் நாம் வாசிக்கிறோம் (I சாமுவேல் 8:3,5). வழக்கை நீதியாக நியாயந்தீர்க்காதவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதம் எப்படி இருக்கமுடியும்? தேவனுக்குப் பயந்து, நீதியாய் நியாயந்தீருங்கள். அப்பொழுது, கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

**3. பரதேசியை, திக்கற்றவனை, விதவையை ஒடுக்காதீர்கள் (வச. 6) - Oppress not the stranger, the fatherless, and the widow.**

தேவனாகிய கர்த்தர், ஐசுவரியவான்களுடன் ஏழைகளையும் சிருஷ்டித்துள்ளார். ஆனால் ஐசுவரியவான்கள்தான் தரித்திரரை ஒடுக்குகிறார்கள், நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள் என்று, யாக்கோபு தம் நிருபத்தில் எழுதியுள்ளார் (யாக்கோபு 2:6). கர்த்தர், பரதேசிகள், திக்கற்றவர்கள், விதவைகள் மேல் இரக்கமுள்ளவராயிருக்கிறார் (உபாகமம் 24:17-22). அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவரைப்போலவே இரக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். வேத வசனம் கூறுகிறது: “ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்” (நீதிமொழிகள் 19:17). ஆகவேதான், “விதவைகளின் வீடுகளைப் பட்சிக்கிற வேதபாரகர் பார்வைக்கு நீண்ட ஜெபம் செய்தாலும், அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்” என்று இயேசு தாமே கூறியுள்ளார் (லூக்கா 20:47).

### 4. குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தாமலிருங்கள் (வச. 6) - Shed not innocent blood

தேவன் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த பத்துக்கற்பனைகளில் ஒன்று, “கொலை செய்யாதிருப்பாயாக” என்பது. எழுத்தின்படியே குற்றஞ்செய்யாதவர்களைக் கொன்றவர்களின் பெயர்களைப் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். காயீன் தன் பொறாமையினால் தம்பி ஆபேலைக் கொன்றான்; தாவீது, இச்சையின் காரணமாக உரியாவை யுத்தத்தில் மடிவித்துக் கொன்றான்; ஆகாப் இராஜா, தன் மனைவியின் தூண்டுதலினால் குற்றமே செய்யாத நாபோத்தைக் கொலை செய்வித்தான். சங்கீதம் 101:5இல் இவ்வாறு வாசிக்கிறோம்; “பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன்;”

புதிய ஏற்பாட்டில், எழுத்தின்படியுள்ள கொலையல்ல, பிறரைக் குறித்து அவர்கள் அறியாதவாறு அவதூறாகப் பேசுவது, கொலை செய்வதற்கு ஒப்பாயுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. மேலும், ஒருவன் தன் சகோதரனை, “மூடனே” என்று கூறினாலும், அது கொலைக்கு ஒப்பான குற்றமாகக் கருதப்பட்டு, அவ்வாறு கூறுகிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான் என்று, இயேசு மத்தேயு 5:22இல் கூறியுள்ளார். இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில், எழுத்தின்படியே ஒரு மனிதனைக் கொலை செய்வதும், ஒருவரைக்குறித்து அவதூறாய்ப் பேசுவதும் ஒன்றுதான்; இருவரும் எரிநரகத்திற்கு ஆளாவார்கள் என்பதே. ஆகவே, நம் வாயின் சொற்களைக் குறித்து அதிக ஜாக்கிரதையாக இருப்பது மிகவும் அவசியம்.

**5. அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருங்கள் (வச. 6) - Do not go after other gods to your own harm**

இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னர் ஒருவேளை நாம், கல்லும் மரமுமாகிய தெய்வங்களை வணங்காமலிருக்கலாம். ஆனால் இயேசுவைக் காட்டிலும் ஒன்றையோ, அல்லது ஒருநபரையோ, அதிகமாக நேசித்து, அதற்கு, அல்லது அந்நபருக்கு முதலிடம் கொடுக்கும்போது, அது நமக்கு ஒரு விக்கிரகமாகிவிடுகிறது. அவ்வாறு நம் உள்ளத்தில் வேறு ஒருவருக்கோ, அன்றி ஒன்றிற்கோ முதலிடம் கொடுப்பதை அவர் வெறுக்கிறார். ஆகவேதான், யாத்திராகமம் 20:3இல் இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் கொடுத்த கட்டளையை மறுபடியும் எரேமியா தீர்க்கதரிசி மூலம் தம் மக்களுக்குக் கொடுக்கிறார்.

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் வழிகளையும் கிரியைகளையும் சீர்ப்படுத்தி, புத்தாண்டில் பிரவேசியுங்கள். இவ்வாண்டின் ஆசீர்வாதமாகிய சமாதானத்தையும் பாதுகாப்பையும் உங்கள் வீடுகளில் பெற்றுக்கொள்ளுங்கள். ஆமென்.

## நிருபனின் நிருபம் ✍

**"கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும். நீதி அவருக்கு முன்னாகச் சென்று, அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும் (சங்கீதம் 85:12,13).**

மேற்கூறப்பட்ட வாக்குத்தத்தத்தை எபெனேசராம் தேவன்தாமே 2018ஆம் ஆண்டாகிய இப்புத்தாண்டிலே மன்னா வாசகர் ஒவ்வொருவரது வாழ்விலேயும் நிறைவேற்றுவாராக. அவருடைய நீதி அனுதினமும் அவருக்கு முன்னாகச்சென்று, அவருடைய புனிதமான அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தி மகிழ்விக்கும் என்பதில் எவ்வளவேனும் சந்தேகமில்லை. அவருடைய அடிச்சுவடுகளிலே நாம் நிறுத்தப்படும்போது, சத்துருவானவன் எவ்விதத்திலேயும் நம்மைத் தொடுவதற்குத் தேவன் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டார்.

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார் (சங்கீதம் 48:14) என்ற வசனத்தின்படி அவர் நம்முடைய தேவனாயிருக்கிறபடியால் நாம் செல்லும் ஒவ்வொரு பாதையிலும் நிச்சயமாகவே தம்முடைய அடிச்சுவடுகளில் நம்மை இவ்வாண்டு முழுவதும் நடத்துவாராக.

கிருபையின் மன்னா வாசகர் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

புத்தாண்டில் பரமனின் சேவையில்
உங்கள் ஊழியன்
**எஸ். ஆனந்த்**

# மகா பிரதான ஆசாரியர்

மகா பிரதான ஆசாரியர் என்ற தலைப்பிலே முகவுரையாக சில வசனங்களை நாம் வாசிப்போம். எபி. 4:14ஆம் வசனத்தின் மூலமாய்ப் பிரதான ஆசாரியராகிய இயேசு என்ன தகுதியுடையவராக இருந்தார் என்று பார்க்கலாம். “வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்...”

## 1. தேவனுடைய குமாரன்- The Son of God

தேவனுடைய குமாரன் மகா பிரதான ஆசாரியராக மாறினார். அப்படியானால் மெல்கி சேதேக்கின் காலத்திற்குப் பிறகு வந்த அத்தனை பேர்களும் தேவகுமாரர்கள் அல்ல. அவர்கள் மனுஷ குமாரர்கள், அல்லது பூமியிலே பிறந்த மனுஷர்கள். பிரதான ஆசாரியர்களாய் மனுஷர்கள் வேலை செய்தபடியால் அதற்கு மேலான ஒரு பதவியை ஆண்டவர் தம் குமாரனுக்குக் கொடுத்தார். அதுதான் மகா பிரதான ஆசாரியர் என்ற பதவி. தேவ வசனம் தெளிவாகச் சொல்கிறது, மகா பிரதான ஆசாரியர் இயேசுவே என்று. அந்த நாட்களிலே பிரதான ஆசாரியர்கள் தங்கள் பெயர்களிலே அர்த்தம் உடையவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பெயர்களிலிருந்தே பிரதான ஆசாரியர் வகுப்பைச் சேர்ந்தவர்களா அல்லது லேவி குடும்பத்தைச் சேர்ந்தவர்களா என்று அறிந்துகொள்ள முடியும். தேவ குமாரனாகிய இயேசுவாகிய மகா பிரதான ஆசாரியருடைய பணி லேசாக மாற்றப்படுகிறது. மத். 1:21ஆம் வசனத்தைக் கவனித்துப் பாருங்கள். “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார் என்றான்.” அந்த நாள் மட்டுமாய்த் தனக்கும் தன்னுடைய ஜனத்தின் பாவத்திற்கும் பலி செலுத்தும்படியாக, பாவ நிவாரண பலி செலுத்தும்படியாக, பிரதான ஆசாரியன் உள்ளே சென்றான். ஆசாரியர்கள் ஜனங்களை இரட்சிக்க முடியாது. ஜனங்களின் பாவங்களுக்காக மன்னிப்பைக் கேட்டு வாங்கலாம். அது பழைய ஏற்பாட்டின் ஒழுங்காக இருந்தது. புதிய ஏற்பாட்டில் மன்னிப்பைக் கேட்டு வாங்குவதற்கு ஒரு மகா பிரதான ஆசாரியர் வேண்டியதாயிருந்தது. அதுவும் வெறும் வாயளவில் மன்னியும் என்று சொல்வதல்ல; அல்லது வெறும் மதாபிமான கிரியைகளை (rituals) செய்வதினால் மாத்திரமல்ல, யார் மற்றவர்களின் பாவங்களை இரட்சிக்கக் கூடுமோ அவர் ஒருவர் மட்டுமே இந்த மாகா பிரதான ஆசாரியத்துவத்திற்குத் தகுதியானவர். அப்படியானால் அந்தத் தகுதி

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மட்டுமே இருந்தது. அல்லேலூயா! இந்த இயேசு கிறிஸ்து பூமியிலுள்ள எந்த ஆசாரிய வகுப்பிலிருந்தும் வரவேயில்லை.

மத்தேயு முதலாம் அதிகாரத்திலே வருகிற வம்சவரலாற்றிலே "அவன் இவனைப் பெற்றான். அவன் இவனைப் பெற்றான்" என்கிற பெரிய பட்டியலைக் காணலாம். இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலே, ஆசாரிய வகுப்பிலே வரக்கூடிய நிலையிலே யாருமே இல்லை. இந்த மனுஷ வம்ச வரலாற்றிலே அவருடைய பெயர் இடம் பெறாமலிருந்தாலும் சாதாரண மனுஷனாக இரட்சகராக வந்தபடியினால் அவர் ஒருவரே பிரதான ஆசாரியராக அல்ல, மகாபிரதான ஆசாரியராக மாறமுடியும்.

எபி. 5:10இல், "மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த மகா பிரதான ஆசாரியர் என்று இவருக்கு நாமம் தரிப்பித்தது தேவனே.

தேவனாலேதான் இந்தப் பிரதான ஆசாரியத்துவத்தைப் பெற்றுக் கொண்டார். எபி. 4:15–"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."

### ஊழியஞ்செய்கிற மகா பிரதான ஆசாரியர் – The appointment of the Great High Priest

ஊழியஞ் செய்கிற மகா பிரதான ஆசாரியர் ஊழியஞ்செய்யும்படியாக நியமிக்கப்பட்ட ஒரு அனுபவம் இங்கே வேதத்திலிருக்கிறது. யாராவது ஒருவராலே ஒரு நபர் இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தப்படாவிட்டால் அவர் அந்த ஊழியத்தைச் செய்ய முடியாது.

எபி. 5:4,5 வசனங்கள் கூறுகிறது: "மேலும் ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத் தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்." பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியஞ்செய்வதற்காக ஊழியக்காரராக, மகா பிரதான ஆசாரியராக நியமிக்கப்பட்ட நியமனத்தைப் பார்க்கையிலே, தேவனால்

அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் தானாய் ஏற்படுகிறதில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளக்கூடும்.

இயேசு பிரதான ஆசாரியராகத் தம்மைத் தாமே உயர்த்தவில்லை. பிதாவாகிய தேவன்தான் அவரை உயர்த்தினார் என்பதைத் தெளிவாக அறியமுடியும்.

சங். 2:6,7 வசனங்களிலே "நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன் என்றார்." "கர்த்தர் என்னை நோக்கி நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்" என்று கூறப்பட்டுள்ளது. எபி. 5:5இல் இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார். சியோன் மீதில் இராஜாவாக மட்டுமல்ல, ஆசாரியனாகவும் அபிஷேகம் பண்ணினார்.

அந்த நாட்களிலே சீயோன் என்பது ஒரு மகா ராஜாவின் பட்டணமாக மட்டுமல்ல, அது தேவனுடைய சமுகம் நிறைந்த சபையாகவும் அழைக்கப்பட்டது. எபி. 1:3-5 இதே சம்பவத்தை எபிரெய நிருபம் ஆக்கியோன் அதை நினைவுபடுத்துகிற வேளையிலே எபி. 1:3ம் வசனத்தின் கடைசிப் பகுதியிலே "உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" என்றும், 4ஆம் வசனத்தில், "'இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்'' என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த மேன்மையான ஸ்தானத்திற்கு அவரை உயர்த்தினவர் யார்? பிதாவாகிய தேவன்தான். எந்த நிலையிலே இயேசு உயர்த்தப்பட்டார்? உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்காரும் நிலையில் உயர்த்தப்பட்டார். எபி. 8:1, ''பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்" என்று கூறுகிறது. அப்படியானால் தேவன் தம் மகத்துவமான வலது பாரிசத்திலே உட்காரவைத்து, அந்தப் பிரதான ஆசாரிய ஊழியத்தைச் செய்யவைத்ததாக நாம் காண்கிறோம்.

யாத். 28:1இல், "உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ ஆரோனையும், ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக் கொள்வாயாக" என்று வாசிக்கிறோம்.

ஆரோன் அன்றைக்குப் பிரதான ஆசாரியனாக இருந்தான். ஆரோனைப் போல அழைக்கப்படாவிட்டால் ஒருவனும் தானாக இந்தக் கனமான ஊழியத்திற்கு ஏற்படுகிறதில்லை. அப்படியானால்

ஆரோனைப்போல அழைக்கப்பட்ட அந்த அநுபவம் இப்போது வாசிக்கக் கேட்ட வசனத்திலிருந்து அறிந்து கொள்கிறோம்.

ஆண்டவர் மோசேயைப் பார்த்துச் சொல்லுகிறார், "இஸ்ரவேல் புத்திரரிலிருந்து இந்த ஆரோனைப் பிரித்து உன்னிடத்தில் சேர்த்துக்கொள்" என்று, நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியராக தேவனாலே அபிஷேகம் பெற்ற பிறகு அவர் இந்த உலகத்தைவிட்டுப் பிரிக்கப்பட்டு, திரும்ப வானத்திற்கு ஏறெடுக்கப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்திலே உட்காரவைக்கப்பட்டு, இந்தக் கனமான ஊழியத்திற்கு ஏற்படுத்தப்படுகிறார். அப்படியானால் நம் பரலோக மோசேயாகிய பிதாவாகிய தேவன், இங்கே ஆரோன் எப்படி பிரிக்கப்பட்டு மோசேயுடன் சேர்க்கப்பட்டாரோ, அப்படியே இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலே இரட்சணியகிரியையை முடித்தபிறகு அவரை இந்த உலகத்தை விட்டுப் பிரித்து, தமது வலதுபாரிசத்திலே உட்கார வைத்து, அங்கிருந்தே தம்முடைய பிரதான ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்படியாக ஏற்படுத்தினார். அல்லேலூயா!

யோவான் 8:54இல், "இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்" என்று வாசிக்கிறோம். ஆம், இந்தப் பிரதான ஆசாரிய நியமனம் என்பது, இயேசு இந்த ஊழியத்தைச் செய்ய தம்மைத்தாமே உயர்த்தவில்லை. பிதாவாகிய தேவனே உயர்த்தினார். மகா பிரதான ஆசாரியராக உயர்த்துவதற்கு இயேசுவிடத்தில் சில காரணங்கள் இருந்தது. அவற்றை எபி. 5:4-10 வசனங்களில் பார்க்க முடிகிறது.

தேவன் இயேசுகிறிஸ்துவை ஊழியஞ்செய்கிற பிரதான ஆசாரியராக ஏற்படுத்தினார். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி...விண்ணப்பம் பண்ணினார்" எபி. 5:7. அவரிடத்தில் ஒரு வல்லமையான தலைவரும், தலைமைத்துவமும் இருந்தது. ஒருவன் ஊழியத்திற்கென்று ஏற்படுத்தப்பட வேண்டுமானால் அந்த ஏற்படுத்தப்படுகிற நியமனத்திலே அவன் வெற்றியோடு முன்னேறவேண்டுமென்றால், அவனுக்கு முன்பாக ஒரு வல்லமையான தலைவனோ அல்லது தலைமைத்துவமோ இருக்கவேண்டும். ஊழியஞ் செய்கிற பிரதான ஆசாரியராக ஏற்படுத்தப்பட்டதன் காரணம் அவருக்கு ஒரு வல்லமையான தலைமைத்துவம் இருந்தது. "அவர் மாமிசத்திலே இருந்த நாட்களில் தம்மை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லவரை நோக்கி,..." இதன் அர்த்தமென்ன? வல்லமையான தலைமைத்துவம் மரணத்திலிருந்து

விடுவிக்க வல்லது. இயேசுவிற்கே வல்லமையான தலைமைத்துவம் அவசியமாயிருந்தால் உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு அதிகமாக வல்லமையான தலைமைத்துவம் அவசியம்!

**வல்லமையான ஜெப ஜீவியம்- He had a powerful prayer life**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வல்லமையுள்ள ஜெப வாழ்க்கையை உடையவராய் இருந்தார். 7ஆம் வசனம் : "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் செய்தார்."

ஒருவன் உண்மையான ஊழியனாய் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் இயேசுவைப்போல் வல்லமையான ஜெபவாழ்க்கை அவசியம். இயேசு தனிமையாகச் சென்று ஜெபித்தார், மலைமேல் ஏறி ஜெபித்தார், அதிகாலையில் மலையிலே தனித்திருந்து ஜெபித்தார், அற்புதங்கள் நிறைவேற்றுவதற்கு முன் ஜெபித்தார், with strong crying – கதறுதலோடு ஜெபம் பண்ணினார். ஆண்டவருக்கு ஊழியஞ் செய்ய விரும்புகிறோமா? இப்படிப்பட்ட ஜெபவாழ்க்கை நமக்கும் தேவை. ஜெபத்திலே எந்த அளவிற்குக் கண்ணீர் வடிக்கிறோமோ அந்த அளவிற்கு வல்லமையாக ஊழியஞ் செய்ய முடியும்.

**வல்லமையான சாட்சி -A powerful witness**

எபி. 5:7இல், ''தமக்குண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு"...நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனால் பிரதான ஆசாரியராக ஏற்படுத்தப்பட்டதன் காரணம், அவருக்கு வல்லமையான சாட்சி இருந்தது. பயபக்தி யார் மேல் இருந்தது? தேவன் மேல். பயபக்தியற்ற ஒரு ஜெபவாழ்க்கை ஆசீர்வாதமான வாழ்க்கையாக இராது. ஆனால் பிரதான ஆசாரியராக ஏற்படுத்தப்பட்ட இந்த இயேசு வல்லமையுடைய சாட்சியாக இருந்தார். அவருக்குப் பயபக்தி தேவையா? அவருக்கே பயபக்தி தேவையாக இருந்ததால் நமக்கு எவ்வளவு அதிக அளவு தேவையாக இருக்க வேண்டும்? அந்த பயபக்திதான் அவரை அடுத்த நிலைக்குள் வழிநடத்தினது.

**வல்லமையான பயிற்சி - Powerful training**

எபி. 5:8–''அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்." இன்றும் ஊழியத்தில் வல்லமையான பயிற்சி இல்லாமல் ஊழியஞ் செய்ய முடியாது. இன்று பல இடங்களிலே வல்லமை முகாம், அக்கினி பயிற்சி முகாம் என்று பத்து, பதினைந்து நாட்கள் நடத்துகிறார்கள். அதைப்பற்றி நான் குறைகூறவில்லை. ஆனால் இந்த வல்லமையான பயிற்சி என்பது பாடுகளோடு இணைந்த

ஒரு பயிற்சி. இந்த வசனத்திலே முக்கியமாக என்னைக் கவர்ந்த சொற்கள் "அவர் குமாரனாயிருந்தும்" "Though he were a Son" என்பதே. அப்படியானால், அவர் தம் பிதாவிடமிருந்துதான் பயிற்சி எடுத்துக்கொண்டார். அடிமையாயிருந்து அல்ல, மாணவனாயிருந்து அல்ல, குமாரனாயிருந்து பாடு அநுபவித்து, கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.

## பாடுகள் - Sufferings

நாம் எந்த அளவு பாடுகள் அநுபவிக்கிறோமோ அந்த அளவிற்கு வல்லமை பெறமுடியும். புத்தகப் பயிற்சி, வேதாகம பயிற்சி என்று நிறைய பயிற்சிகள் எடுக்கிறார்கள். ஆனால் பாடு அநுபவிக்கிற பயிற்சி எத்தனை பேர் எடுக்கிறார்கள்?

எபி. 5:9இல், "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைகிறதற்குக் காரணராகி" என்று பார்க்கிறோம். அப்படியானால் இவருக்குக் கொடுக்கப்பட இருக்கிற assignment என்ன? தமக்குக் கீழ்ப்படிகிற யாவரையும் நித்திய இரட்சிப்பை அடையப் பண்ண வேண்டும் என்பது. அது எவ்வளவு பெரிய ஊழியம்! அதன் காரணமாகத்தான் அவர் பூரணப்படுத்தப்பட்டார்.

மகாபிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்வதற்கு நியமிக்கப்பட அவர் தாமாக உயர்த்தப்படவில்லை, உயரவில்லை, தேவனால் உயர்த்தப்பட்டார். ஏன்? அவர் நல்ல தலைமைத்துவத்தை உடையவராய் இருந்தார், நல்ல ஜெபவாழ்க்கை உடையவராய் இருந்தார், வல்லமையான சாட்சி, வல்லமையான தலைமைத்துவம், வல்லமையான பயிற்சி பெற்றிருந்தார்.

## ஊழியஞ்செய்கிற பிரதான ஆசாரியருடைய தகுதிகள் - Qualifications

"மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தது போல..." எபி. 3:2.

இயேசு ஊழியஞ்செய்கிற பிரதான ஆசாரரியராக இருந்ததற்குக் காரணம், அவர் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராய் இருந்தார். நாமும் ஊழியஞ்செய்ய வேண்டுமானால் நம்மை ஏற்படுத்தினவர்களுக்கு உண்மையாயிருக்க வேண்டும். நம்முடைய தலைமைப்போதகருக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த ஊழியத்திற்கு அழைத்தவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

I சாமு. 12:6–“மோசேயையும் ஆரோனையும் ஏற்படுத்தினவரும், உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் கர்த்தரே.” எபி. 3:5– “சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்.” ஊழியத்தில் மிக முக்கியமான காரியம் உண்மை. ஆம் இயேசு உண்மையுள்ளவராக இருந்தார். அப். பவுல் “இயேசு உண்மையுள்ளவராயிருக்கிறார்” என்றார். II தீமோ. 2:13

**பிரதான ஆசாரியரின் தகுதி**

**கனத்திற்குரியவர் - The qualification of the Great High Priest**

ஒரு பிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்யக்கூடிய நிலையிலே அவருக்கு இருந்த இரண்டாவது குணாதிசயம் கனத்திற்குப் பாத்திரவானாய் அவர் நடந்து கொண்டார். அதன் அர்த்தம், ஒரு சாதாரண நபராக ஜனங்களோடு ஊழியப் பாதையில் கலந்துகொள்ளவில்லை. அவர் ஊழியப் பாதையில் பிரித்தெடுக்கப்பட்டவராக நடந்து கொண்டார்.

“இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை” என்றார் இயேசு. ஒரு ஊழியக்காரன் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு ஊழியத்தைச் செய்யும்போது அவன் கனத்திற்குப் பாத்திரவானாய் மாறுகிறான். கனத்திற்குரிய பாத்திரம் என்று கூறுகையில், யோவான் 12:26இல் ஆண்டவராகிய இயேசு கூறுகிறார், “ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்” என்றும், “நான் எதையும் சுயமாய்ச் செய்யவில்லை, பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை” என்றார் (யோவான் 8:28,29).

**ஊழியத்திலே மகிமை இருந்தது**

II கொரி. 3:7இல் அவன் முகம் பிரகாசித்தது என்று வாசிக்கிறோம். ஊழியஞ் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப் பிரகாசம் உண்டானபடியால் மோசேயின் முகம் அவன் மலையிலிருந்து இறங்கும்போது பிரகாசித்தது. ஒழிந்து போகக்கூடிய நியாயப்பிரமாணத்தின் காலத்திலேயே அவ்வளவு மகிமை இருந்திருக்குமானால், ஆவிக்குரிய ஊழியத்திலே கிருபையின் கால ஊழியம் எவ்வளவு மகிமை பொருந்தியதாக இருக்கும்! ஆம், இயேசு கனத்திற்கும், மகிமைக்குமுரிய ஊழியத்தைச் செய்தார்.

**உத்தரவாதமுள்ள ஊழியம் :**

எபி. 3:6இல், “கிறிஸ்துவோ... உண்மையுள்ளவராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்” என்று வாசிக்கிறோம்.

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் மேற்பார்வையிடுகிற உத்தரவாதம் அவருக்கு இருந்தது. மேற்பார்வை என்றால், அந்த வீட்டிற்குச் சொந்தக்காரராக உத்தரவாதத்தோடு கண்காணிக்கிற பொறுப்பு அவருக்கு இருந்தது.

எபி. 4:15 இவ்வாறு கூறுகிறது : “நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.”

**Sensitive to our infirmities** - நம்முடைய பலவீனங்களைக் குறித்து அறிவோடுகூட அனுபவப்பட்டவராக ஊழியம் செய்கிற பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். அவர் நம்மைப் போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டவர்.

இந்த வசனம் ஆங்கிலத்திலே மிக அருமையாக இருக்கிறது. Heb.4:15 - "Let us then approach the throne of grace with confidence, so that we may receive mercy and find grace to help us in our times of need." நம்முடைய பலவீனங்களை உணரக்கூடியவராக இருந்தபடியால்தான் பிரதான ஆசாரிய வேலையைச் செய்வதற்குத் தேவன் அவரை ஏற்படுத்தினார். கடைசியாக, எபி. 4:16இல், “ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்” என்று கூறப்பட்டுள்ளது. ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்தல் – அந்த குணாதிசயம் என்ன? He is always ready to help us. ஒரு தேவை இருக்கிறதா? உடனே அவரிடம் கேட்கலாம். எப்போது நமக்கு உதவி தேவையோ, எந்த நேரத்திலும் நமக்கு உதவி செய்ய நம்முடைய பிரதான ஆசாரியர் ஆயத்தமாக இருக்கிறார். இப்படிப்பட்ட பிரதான ஆசாரியர் நமக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பது எவ்வளவு மகிழ்ச்சி! உண்மையுள்ளவராக, கனத்திற்குரியவராக, உத்தரவாதமுள்ளவராக, சகாயஞ்செய்கிறவராக நம்முடைய பிரதான ஆசாரியர் நமக்கு இருப்பது எத்தனை பாக்கியம்!

# THE PROMISE FOR THE NEW YEAR

**"... Jacob shall not now be ashamed,..."**

Isaiah 29:22

The Prophecy concerning Jacob comes through Prophet Isaiah that Jacob will not be ashamed henceforth. Dear children of God, you can take this as a prophecy for you as well as a promise for the New Year 2018, which will be a year of hope, courage, walking upright and looking above for blessings.

What is shame? It is a feeling one gets when one meets with failure or defeat. Different people meet with failure or defeat or a loss of some kind in different ways, and they feel ashamed.

In the year 2018 you will not be ashamed. There will be no failure in your job, business, your career, your future and in the future of your children. Therefore, you will not be ashamed. God will certainly fulfil His promise because you are a spiritual Jacob, also known as Israel. Whatever is said about Jacob holds good for you as well. Here is another promise from God Almighty: "My people shall never be ashamed" (Joel 2:26). In v. 25, He says He will restore to you all that you lost in 2017, and make you walk with others lifting up your head without feeling ashamed.

The following are the groups of people who will not be ashamed according to Scriptures:

1. Those who believe in Him (the Lord) will not be put to shame-Romans 10:11. In v.9 the apostle Paul says that whosoever believes in Jesus, who has been raised from the dead, will never be ashamed. That is to say, if you do not believe in the resurrection of Jesus, you will not be saved,

and you will land up in hell where you will feel ashamed that you have lost a golden opportunity of being saved and going to heaven. Therefore, get saved, and thank God for not letting you feel ashamed.

**2. Those who have respect to all His commandments - Psalm 119:6.**

This is very important for it speaks of obeying God's commandments. When you do not respect God's commandments, and disobey them, you will fail to inherit His promises. Then you will be put to shame.

God gave a specific command to Lot and his family not to turn back as they were fleeing Sodom which was being destoryed by fire and brimstone. But, Lot's wife turned back and became a pillar of salt.

Even Moses the man of God disobeyed God's command to speak to the rock, but struck it with his rod. God punished him so that he could only see Canaan but could not enter it.

**3. Those who wait upon the Lord will not be ashamed - Isaiah 49:23.**

This promise is for those who prayerfully meditate on the Word of God, and wait for God to speak to them; and for those who wait for God's time for a miracle.

If you get up early in the morning, read the Word of God, and wait for God's counsel, you will not err in your walk, but will be guided by the Lord. You should also wait upon the Lord to receive His strength. If you always take counsel from God, and walk according to His directions, you will not be ashamed.

**4. Those who are upright and honest will not be ashamed in the days of danger - Psalm 37:18,19.**

Verse 18 says that the Lord knows the days of the upright and their inheritance for ever. In verse 19 He promises that they will not be put to shame in the time of evil, and they will be satisfied in the days of famine.

The Lord gives beautiful promises to the upright. If you wish to be upright, please only the Lord and not any human being. Job an upright man was steadfast in his faith in spite of the torments and trauma Satan brought in his life, and did not heed his wife's advice to curse God and die (Job 2:9,10). God did not put him to shame, but blessed him two fold.

**5. Those who trust in the Lord will not be ashamed - Psalm 22:5.**

God's eyes are on people who trust in Him. Shadrach, Meshach and Abednego trusted in the Lord, and refused to bow before the golden image set up by the king of Babylon. They were thrown into the fiery furnace heated seven times over. But, the Lord was with them in the furnace, and saved them. Thus, the three young men were not put to shame.

Similarly, Hezekiah king of Judah trusted in the Lord with all his heart, and therefore, the Lord helped him to win a victory over Sennacherib the Assyrian king who taunted him for his faith in the God of Israel. The Lord sent an angel, and slew a lakh and eighty five thousand Assyrian soldiers (Isaiah 37:36).

In the New year 2018, believe in God, respect the commandments of God, wait upon the Lord, be upright, and trust fully in the Lord. Then, you will not be put to shame.

I wish you all a very happy and blessed New Year 2018.

# SMOOTH STONES FROM THE BROOK

## ON WINGS OF PRAYER

I breathed a heartfelt evening prayer,
To God on High and lingered there,
To see if God did truly care, in heaven above.
Down from the heavens the answer came,
A quiet peace passed through my frame.
I felt His presence, praise His name, for God is love.

I sang a joyful evening song;
It swept the stars, its way along,
And up amidst that heavenly throng,
Reached God on High;
Then back into my spirit came
God's presence, as a bush aflame;
I bowed again and praised His name,
for God was nigh.

How wonderful to have the sight,
Up past the stars to take our flight
Into God's Holy, sacred light beyond the blue;
There to have access by His grace,
Into the prsence of His face,
And then to earth, our way return, with hope anew.

*If undelivered please return to*

**A.C.A. K.K. Nagar Ministry,**
**No. 50, Kannigapuram 1st Street, K.K. Nagar, Chennai - 600 078.**
**Phone : 044-2366 2677 / Cell : 9444141944**
**Email : sanandaca@gmail.com**

L.R. Graphics, Ph : 2489 5236